1968 ஆகஸ்ட் 21]

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) ஆம். எலும்பு முறிவு மருத்துவம் கதிர் வீச்சு மருத்துவம் முதலிய பிணிகளுக்குக் கூடுதல் இடவசதி அமைப்பதற்காக ஆறேகால் லட்ச ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையில் போதிய இட வசதியில்லாமல் வராந்தாவில் நோயாளிகள் படுக்க வைக்கப்பட்டிருக்கின்றனர். இந்த ஆஸ்பத்திரி விரிவுபடுத்தி கட்டப்படுமா? ஆரம்பத்தில் இந்தக் கட்டடத்தை விரிவுபடுத்துவதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ? பின்னல் இது குறைக்கப்பட்டதா ? இப்பொழுது வேலை தொடர்ந்து நடத்தப்படுகிறதா ? விரிவு படுத்துவதற்கான முயற்சி எப்பொழுது முடியும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரூ. 6¼ லட்சம் செலவில் த்ரீ-ஸ்டோரிட் பில்டிங் கட்டுவதற்கு முடிவு எடுக்கப் பட்டது. இந்த ஆண்டு கிட்டத்தட்ட ரூ. 3 லட்சம் செலவழிக்கப் பட்டிருக்கிறது. இன்னும் ரூ. 4 லட்சம் செலவழிக்கப்படும்.

DR. H. V. HANDE : If I remember right, the original scheme was for Rs. 12-1/2 lakhs. Dr. P. V. Cherian was one of the members of the committee and they raised a fund of Rs. 1 lakh. Later on, the Government promised to give some more funds. Will the Minister be pleased to state what the fund originally allotted was, what the orginal scheme was and whether there has been any reduction, when exactly the scheme is going to be completed and how many beds are going to be provided ? Will the Minister be pleased to give details about these things?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I have no particulars at present. My Friend may put a separa te question.

மேலூருக்கு குடி நீர்த் திட்டம்

* 80 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு மருத்துவதுறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மதுரை மாவட்டம், மேலூருக்குக் குடி தண்ணீர் வழங்கும் திட்டத்தின்கீழ் பள்ளப்பட்டிக்கு அண்மையில் ஓடும் பாலாற்றிலிருந்தோ அல்லது திருப்புவனத்திற்கு அண்மையில் உள்ள வைகையிலிருந்தோ தண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்பெறும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) வைகை ஆற்றிலிருந்தாவது அல்லது பெரியாறு வாய்க்காலி லிருந்தாவது மேலூர் பஞ்சாயத்துக்கு நீர் வழங்கும் திட்டத்திற் கான ஆய்வு வேலை நடந்து கொண்டிருக்கிறது.

திரு. பெ. மலேச்சாமி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை முடிப்பதற்கு இந்த அரசு ஏதாவது கால அளவு நிர்ணயித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்பொழுது தான் ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. ஆய்வு முடிந்த பிறகு தான் அதைப்பற்றி சொல்ல முடியும்.

I.A.S. Officers

*61 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the criterion adopted by this Government for recommending officers in the Madras Civil Service and Police Service for Indian Administrative Service and Indian Police Service; and

(b) whether officials from any particular department is preferred for conferring Indian Administrative Service?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இந்திய ஆட்சிப் பணி இந்தியக் காவல் துறைப்பணி தேர்வுக்குழுவின் கூட்டம் ஆண்டுக்கொருமுறை நடக்கின்றது. இக் குழு 1955-ம் ஆண்டு இந்திய ஆட்சிப்பணி/இந்தியக் காவல் துறைப்பணி (பதவி உயர்வு மூலம் நியமனம்) விதி முறைகளின்கீழ் அமைக்கப் பட்டுள்ளதாகும். அந்த ஆண்டில் ஜனவரித் திங்கள் முதல் நாளன்று மாவட்டத் துணை ஆட்சித் தலைவர் காவல் பிற துணைக் கண்காணிப்பாளர் பதவியில் எட்டு ஆண்டுகளுக்குக் குறையாத கால அளவுக்குத் தொடர்ந்து பணியாற்றி முடித்தவர்களும், மாநில சிவில் பணியைக் காவல் துறைப் பணியைச் சேர்ந்தவர்களுமான நிலையான உறுப்பினர்களது நேர்வுகளை இக் குழு ஆராய்ந்து "தேர்வுப்பட்டியல்" ஒன்றைத் தயாரிக்கின்றது. அத் தேர்வுப் பட்டியல் மத்தியப் பணியாளர் தேர்வுக் கழகத்தினாலும், இந்திய அரசினாலும் ஒப்பளிக்கப்பட்ட பின்னர், அத் தேர்வுப் பட்டியலில் கண்டுள்ள மாநில ஆட்சிப்பணி காவல் துறைப்பணி அதிகாரிகள் முறையே இந்திய ஆட்சிப்பணி இந்தியக் காவல் துறைப்பணிக்கு நியமிக்கப்படுகின்றனர்.

(இ) இல்லை. தொடர்புள்ள துறைகளைச் சேர்ந்த தகுதியுள்ள அதிகாரிகள் அனைவரின் உரிமைகளும் இது குறித்து ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, இதுவரையில் சட்ட மன்றத் துறையிலிருந்து யாராவது இந்திய அரசுப் பணிக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அதைப்பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

THIRU K. VINAYAKAM : While officers of the Madras Civil Services are being recommended for being taken in into the Indian Administrative Service is the principle of communal